# உங்கள் மேன்முறையீட்டை நிரப்புவதும் முழுமையாக்குவதும்

**நீங்கள் RPD தீர்மானத்துக்கான எழுத்துமூலக் காரணங்களைப் பெற்ற திகதியிலிருந்து 15 நாட்களுக்குப் பிந்தாமல்**

- நீங்கள் ஓர் எழுத்துமூல மேன்முறையீட்டு அறிவித்தலை நிறைவு செய்தாக வேண்டும். இம்முக்கிய அறிவுறுத்தல்களுக்கு ஒரு வெற்று மேன்முறையீட்டு அறிவித்தல் இணைக்கப்பட்டுள்ளது.
- நீங்கள் அகதி மேன்முறையீட்டுப் பிரிவின் (RAD) பதிவகத்துக்கு உங்கள் மேன்முறையீட்டு அறிவித்தலின் மூன்று பிரதிகளை (அல்லது இலத்திரனியல் அடிப்படையிற் சமர்ப்பிப்பதாயின் ஒன்று மாத்திரம்) வழங்கியாக வேண்டும்.
- உங்களுடன் மேன்முறையீடு செய்யும் ஒவ்வொருவரும் மேன்முறையீட்டு அறிவித்தலிற் பட்டியலிடப்பட்டாக வேண்டும் அல்லது தீர்மானத்தை மேன்முறையீடு செய்யும் ஒவ்வொருவருக்குமாக ஒரு மேன்முறையீட்டு அறிவித்தல் RAD இற்கு வழங்கப்பட்டாக வேண்டும்.

**நீங்கள் RPD தீர்மானத்துக்கான எழுத்துமூலக் காரணங்களைப் பெற்ற திகதியிலிருந்து 45 நாட்களுக்குப் பிந்தாமல்**

- நீங்கள் ஒரு மேன்முறையீட்டாளர் பதிவை நிறைவு செய்தாக வேண்டும்.
- நீங்கள் RAD இற்கான உங்கள் மேன்முறையீட்டாளர் பதிவின் இரு பிரதிகளை (அல்லது இலத்திரனியல் அடிப்படையிற் சமர்ப்பிப்பதாயின் ஒன்றை மாத்திரம்) வழங்கியாக வேண்டும்.
- மேன்முறையீட்டாளர் பதிவில் உள்ளடக்கப்பட வேண்டிய ஆவணங்களும் தகவல்களும் மேன்முறையீட்டாளர் வழிகாட்டியிற் காணப்படுகின்றன.

**கவனியுங்கள்: நீங்கள் மேன்முறையீட்டாளர் பதிவைக் கோப்பிடுவதற்கான கால எல்லையின் பின்னர் ஒரு மேன்முறையீட்டு அறிவித்தலைக் கோப்பிட்டால் உங்கள் மேன்முறையீடு தள்ளுபடி செய்யப்படலாம்.**

# கோப்பிடும் காலத்தை நீடிப்பதற்கான விண்ணப்பம்:

## மேன்முறையீட்டு அறிவித்தல், மேன்முறையீட்டாளர் பதிவு ஆகிய இரண்டையும் கோப்பிடும் காலத்தை நீடித்தல்

உங்களால் உங்கள் மேன்முறையீட்டு அறிவித்தலையும் உங்கள் மேன்முறையீட்டாளர் பதிவையும் சரியான நேரத்திற் கோப்பிட முடியாமற் போயிருந்தால், நீங்கள் ஒரு கால நீடிப்புக்காக RAD இற்கு ஒரு விண்ணப்பத்தைச் செய்ய வேண்டியிருக்கும். நீங்கள் அவ்விண்ணப்பத்தில் நீங்கள் ஏன் தாமதமாகிறீர்கள் என்பதற்கான காரணங்களை வழங்கியாக வேண்டும். ஒரு கால நீடிப்புக்கான விண்ணப்பம் RAD விதிகளின் 6 ஆம் 37 ஆம் விதிகளைப் பின்பற்றியாக வேண்டும். நீங்கள் உங்கள் மேன்முறையீட்டு அறிவித்தலின் மூன்று பிரதிகளை (அல்லது இலத்திரனியல் அடிப்படையிற் சமர்ப்பிப்பதாயின் ஒன்றை மாத்திரம்) வழங்கியாக வேண்டும். உங்களுக்கு உங்கள் விண்ணப்பத்துக்கு ஆதரவாக ஒரு சத்தியக் கடதாசியும் அல்லது சட்டமுறைப் பிரகடனமும் தேவை.

## மேன்முறையீட்டாளர் பதிவைக் கோப்பிடும் காலத்தை நீடித்தல்

நீங்கள் உங்கள் மேன்முறையீட்டு அறிவித்தலைக் கோப்பிட்டுள்ள போதிலும் மேன்முறையீட்டாளர் பதிவைச் சரியான நேரத்திற் கோப்பிட முடியாமற் போயிருந்தால், நீங்கள் ஒரு கால நீடிப்புக்காக RAD இற்கு ஒரு விண்ணப்பத்தைச் செய்ய வேண்டியிருக்கும். நீங்கள் அவ்விண்ணப்பத்தில் நீங்கள் ஏன் தாமதமாகிறீர்கள் என்பதற்கான காரணங்களை வழங்கியாக வேண்டும். ஒரு கால நீடிப்புக்கான விண்ணப்பம் RAD விதிகளின் 6 ஆம் 37 ஆம் விதிகளைப் பின்பற்றியாக வேண்டும். உங்களுக்கு உங்கள் விண்ணப்பத்துக்கு ஆதரவாக ஒரு சத்தியக் கடதாசியும் அல்லது சட்டமுறைப் பிரகடனமும் தேவை.

## உங்கள் மேன்முறையீட்டு ஆவணங்களை எங்கு கோப்பிட வேண்டும்

நீங்கள் உங்களுக்கு தீர்மான அறிவித்தலை வழங்கிய அகதிப் பாதுகாப்புப் பிரிவுப் பதிவு அலுவலகமுள்ள அதே பிராந்தியத்தில் அமைந்துள்ள RAD பதிவு அலுவலகத்துக்கு உங்கள் ஆவணங்களை வழங்கியாக வேண்டும்.

## ஆலோசகர்

நீங்கள் உங்கள் மேன்முறையீடு தொடர்பில் உங்களுக்கு உதவக் கூடிய ஆலோசகர் உங்களுக்குத் தேவையென நீங்கள் தீர்மானிக்கலாம். உங்கள் ஆலோசகர் உங்களிடம் ஒரு கட்டணத்தை அறவிடுவதாயின் அல்லது வேறு கொடுப்பனவைப் பெறுவதாயின், அவர் ஒரு மாகாணச் சட்டச் சங்கத்தின் (சட்டத்தரணிகளும் சட்ட உதவியாளர்களும்), Chambre des notaires du Québec இன், அல்லது கனடா ஒழுங்குறுத்தற் கழகத்தின் குடிவரவு ஆலோசகர்கள் என்பதன் நல்ல நிலையிலுள்ள ஒரு உறுப்பினராக இருந்தாக வேண்டும். உங்கள் ஆலோசகர் உங்களிடம் ஒரு கட்டணத்தை அறவிடாவிடின், நீங்கள் ஒரு கட்டணம் அல்லது ஏனைய கருத்திற் கொள்ளல்கள் இன்றிப் பிரதிநிதித்துவம் செய்வதன் அறிவித்தல் எனும் படிவத்தை நிரப்பி கூடிய விரைவில் அதனை அமைச்சருக்கும் RAD இற்கும் வழங்கியாக வேண்டும்.

**உங்களுக்கு ஆலோசகர் இருந்தால், உங்கள் ஆலோசகர் கால எல்லைகளை அடைந்து கொள்வதை உறுதி செய்ய நீங்கள் பொறுப்பாளியாகிறீர்கள்.**

## மொழி

நீங்கள் தெரிவு செய்யும் கனடாவின் உத்தியோகபூர்வ மொழியில் (ஆங்கிலம் அல்லது பிரெஞ்சு) நீங்கள் மேன்முறையீட்டு அறிவித்தலைப் பெற்று நிரப்ப வேண்டும். மற்றொரு மொழியிலுள்ள எந்த ஆவணமும் ஒரு ஆங்கில அல்லது பிரெஞ்சு மொழிபெயர்ப்புடனும் மொழிபெயர்ப்பு துல்லியமானதென மொழிபெயர்ப்பாளரால் ஒப்பமிடப்பட்ட ஒரு பிரகடனத்துடன் சேர்த்து வழங்கப்பட்டாக வேண்டும்.

IRB வலைத்தளத்திற் காணப்படும் மேன்முறையீட்டாளர் வழிகாட்டி ஆங்கிலத்துக்கும் பிரெஞ்சுக்குமிடையில் தெரிவு செய்வதைப் பற்றியும் உங்கள் மேன்முறையீட்டில் ஒரு வாய்வழி விசாரணைக்குக் கட்டளையிடப்பட்டால் ஒரு

உரைபெயர்ப்பாளரைக் கேட்பதைப் பற்றியும் கூடிய விபரங்களை வழங்குகிறது.

## உங்கள் தகவல்கள் ஏனைய நிறுவனங்களுடன் பகிரப்படலாம்

நீங்கள் மேன்முறையீட்டுச் செயன்முறையில் வழங்கும் தனிப்பட்ட தகவல்கள் RAD இன் முன்னிலையில் உங்கள் மேன்முறையீட்டைத் தீர்க்கும் நோக்கத்துக்காக *குடிவரவும் அகதிப் பாதுகாப்பும் சட்டத்தின்* கீழ் சேகரிக்கப்படுகின்றன. உங்கள் தனிப்பட்ட தகவல்கள் *குடிவரவும் அகதிப் பாதுகாப்பும் சட்டத்தின்* நிருவாக, அமுலாக்கல் நோக்கத்துக்காக கனடா எல்லைச் சேவைகள் முகவரகம், கனடாக் குடிவரவு, அகதிகள், குடியுரிமை, கனேடியப் பாதுகாப்பு உளவுச் சேவை, சட்ட அமுலாக்கல் முகவரகங்கள் என்பன உட்பட ஏனைய நிறுவனங்களுடன் பகிர்ந்து கொள்ளப்படலாம்.

**மேலும் விபரங்களும் படிவங்களும் மேன்முறையீட்டாளர் பொதியினுட் காணப்படுகின்றன.**

அகதி மேன்முறையீட்டுப் பிரிவு விதிகள் (RAD Rules) என்பதற்கான அணுகலை கனடா நீதித் திணைக்கள வலைத்தளத்திற் காணலாம்.

**உங்களுக்கு ஒரு அச்சுப் பொறிக்கு அணுகல் இல்லாவிடின், மேன்முறையீட்டாளர் பதிவின் ஒரு காகிதப் பிரதியைப் பெற ஆக அருகிலுள்ள IRB அலுவலகத்துக்கு நீங்களே நேரிற் செல்லுங்கள்.**